# உடை விழுந்தது

**15**

முல்லாவின் மனைவி சமையலறையில் கீரை அரிந்து கொண்டிருந்தாள், அச்சமயம் முல்லா மேல்மாடியில் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தார்.மாலை வேளைக்கெனத் தேநீர் தயாரித்த முல்லாவின் மனைவி தன் கணவரைத் தேநீர் குடிக்க அழைத்தாள்.

**மனைவி** :- தேநீர் தயார், வாருங்கள் குடிப்போம்!

**முல்லா** :- இதோ வருகின்றேன். கொஞ்சம் பொறுங்கள்.

**மனைவி** :- இருங்கள்! நான் மேலே கொண்டு வருகின்றேன்.

**முல்லா** :- வேண்டாம். வேண்டாம். நானே அங்கு வருகின்றேன்.

**மேல் அறையில் கதிரை இழுபடும் ஓசை கேட்டது. அத்தோடு தொம்மெனும் பெரிய தொரு சத்தமும் சேர்ந்து கேட்டது.**

**மனைவி** :- ஐயோ! என்ன நடந்தது? நீங்கள் விழுந்து விட்டீர்களா?

**முல்லா** :- இல்லை நான் விழவில்லை எனக் கூறும் போதே, முல்லாவின் மனைவி மேல்மாடிக்குச் சென்றாள்.

**அங்கு முல்லா கீழே விழுந்து கிடப்பதைக் கண்ட முல்லாவின் மனைவி**



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**மனைவி** :- நீங்களா விழுந்தீர்கள், நான் கேட்டதற்கு ஏன் இல்லை யென்றீர்கள்.

**முல்லா** :- நான் விழவில்லை. என் உடைதான் விழுந்தது. அந்த உடைக்குள் நானிருந்தேன்.

**முல்லாவின் மனைவி வாய் விட்டுச் சிரித்தாள்.**

**உரையாடலில் வரும் சில சொற்களுக்கான பொருள்**

| | | |
|---|---|---|
| சமையலறை | - | කුස්සිය |
| கீரை | - | පලා |
| மேல்மாடி | - | උඩුමහල |
| புத்தகம் | - | පොත |
| தேநீர் | - | තේ |
| ஓசை | - | ශබ්දය |
| கதிரை | - | පුටුව |
| விழவில்லை | - | වැටුනේ නෑ |
| மனைவி | - | බිරිඳ |
| அச்சம் | - | බය |
| கணவர் | - | සැමියා |

**கிரகித்தற் பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**
පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.

1. முல்லாவின் மனைவி சமையல் அறையில் என்ன செய்தார்?
2. முல்லா மாடியில் என்ன செய்தார்?
3. தேநீர் தயாரித்தது யார்?
4. கீழே விழுந்தது யார்?
5. நீங்களா விழுந்தீர்கள்? என கேட்டதற்கு முல்லா என்ன பதில் கூறினார்?



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு I

பாடத்தைப் பாத்திரமேற்று, உணர்ச்சி வெளிப்பாட்டுடன் வாசியுங்கள்.

## செயற்பாடு II

சிறு குழுக்களாக இணைந்து பாத்திரமேற்று நடியுங்கள்.

**இலக்கணம்**

**வாக்கிய உறுப்புக்கள்**

*பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள்.*

1) பூனை எலியைப் பிடித்தது.
2) வெள்ளைப் பூனை எலியைப் பிடித்தது.

- ♦ வாக்கியத்தில் கருத்து எழுகின்ற இடம் எழுவாய் எனப்படும்.
- ♦ கருத்து முற்றுப் பெறும் இடம் பயனிலை எனப்படும்.

எனவே முதலாவது வாக்கியத்தில் கருத்து எழுகின்ற இடம் பூனை - இது எழுவாய் ஆகும். கருத்து முற்று பெற்ற இடம் பிடித்தது - இது பயனிலை ஆகும்.

பூனை எதைப் பிடித்தது எனும் வினாவுக்கு வரும் விடை ''எலியை'' என்பதாகும் எனவே எலியை என்பது செயற்படு பொருளாகும்.

இரண்டாவது வாக்கியத்தை அவதானியுங்கள்.

'' வெள்ளைப் பூனை எலியைப் பிடித்தது.''
இதில் பூனை எனும் எழுவாய்ச் சொல்லை விசேடித்துக் கூறுவதற்கு வெள்ளை'' எனும் சொல் பயன்படுகிறது.

இவ்வாறு எழுவாய் பயனிலை செயப்படுபொருள் ஆகியவற்றை விசேடித்துக் கூறுவது அடைமொழி ஆகும்.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**பின்வரும் வாக்கியத்தை அவதானியுங்கள்.**

பெரிய பூனை சிறிய எலியை துரத்திப் பிடித்தது

பெரிய → எழுவாய் அடைமொழி

பூனை → எழுவாய்

சிறிய → செயற்படு பொருள் அடைமொழி

எலியை → செயற்படு பொருள்

துரத்திப் → பயனிலை அடைமொழி

பிடித்தது → பயனிலை

## செயற்பாடு III

பின்வரும் வாக்கியங்களில் உள்ள அடைமொழிகளை இனங்கண்டு அட்டவணையில் உரிய இடத்தில் எழுதுக.

පහත සඳහන් වාක්‍යවල විශේෂණ පද හඳුනාගෙන නියමිත වගුවල ලියන්න.

1) நான் நன்றாகப் படிக்கிறேன்.

2) படமெடுக்கும் பாம்பு பலரைத் துரத்தியது.

3) கிணற்றில் விழுந்த பாலன் ஊரெல்லாம் கேட்கும் படி சத்தமிட்டு அழுதான்.

4) கருங்குருவி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

5) உயர்ந்த கப்பல் வேகமாக ஓடியது.

| எழுவாய் அடைமொழி | செயற்படுபொருள் அடைமொழி | பயனிலை அடைமொழி |
|---|---|---|
| | | |

## செயற்பாடு IV

பாடத்தில் வரும் அடைமொழிகளை இனங்கண்டு எழுதுக.
පාඩමේ තිබෙන විශේෂණ පද හඳුනාගෙන ඒවා ලියන්න.

## செயற்பாடு V

பின்வரும் அடைமொழிகளை வைத்து வாக்கியம் அமையுங்கள்.
පහත විශේෂණ පද යොදා වාක්‍ය සාදන්න.
ஓடிய, பெரிய, புதிய, விரைவாக, துள்ளி

i ------------------------------------------------------------------------------------------

ii ------------------------------------------------------------------------------------------

iii ------------------------------------------------------------------------------------------

iv ------------------------------------------------------------------------------------------

v- ------------------------------------------------------------------------------------------

## செயற்பாடு VI

பின்வரும் (பயனிலைச்) சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வாக்கியத்திலுள்ள இடைவெளிகளை நிரப்புங்கள் (நிரப்புவோம்).
සුදුසු ක්‍රියා පද යොදා වාක්‍ය සම්පූර්ණ කරමු.

குடித்தாய், குடித்தான், குடித்தீர், குடித்தேன், குடித்தாள், குடித்தீர்கள், குடித்தோம், குடித்தார், குடித்தன, குடித்தது, குடித்தார்கள்.

1. நான் தேநீர் ----------------------------------------------------

2. நாங்கள் தேநீர் ----------------------------------------------------


இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

3. நீ இளநீர ----------------------------------------------------------

4. நீர் இளநீர் ----------------------------------------------------------

5. நீங்கள் இளநீர் ----------------------------------------------------------

6. அவன் குளிர்ப்பானம் ----------------------------------------------------------

7. அவள் குளிர்ப்பானம் ----------------------------------------------------------

8. அவர் குளிர்ப்பானம் ----------------------------------------------------------

9. அவர்கள் குளிர்ப்பானம் ----------------------------------------------------------

10. அது தண்ணீர் ---------------------------------------------------------

11. அவை தண்ணீர் ----------------------------------------------------------



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்கவும்

பாடசாலையின் பெயர் :- ..........................................................

| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2011 | | | |
| 2012 | | | |
| 2013 | | | |
| 2014 | | | |
| 2015 | | | |